# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 12.03.2024 |
| Case No. | : **O.S. 265/2019** | Nationality | : Indian |
| Name | : முருகன் | Religion | : |
| Father's/Husband's Name | : கலியபெருமாள் | Age | : 52 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கினை யார் தாக்கல் செய்தார் என்றால் என் மனைவி தாக்கல் செய்தார். எனது மனைவியால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியும் என்றால் அவர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் சாட்சியம் அளிக்க இயலாது. எனது மனைவிக்கு சர்க்கரை நோய் இருப்பது குறித்து மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எப்போதிலிருந்து என் மனைவி உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார் என்றால் சுமார் 2 வருட காலமாக இருந்து வருகிறார். என்னை அதிகார முகவராக நியமனம் செய்து தாக்கல் செய்துள்ள மனுவில் எனது மனைவியிடமிருந்து சிறப்பு பிரமாண வாக்குமூலம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

1ம் பிரதிவாதி சித்ரா எனக்கு எதிராக கும்பகோணம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவ.எண் 420/2018 என வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவ.எண் 268/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ்

படிக்க தெரியுமா எழுத்து கூட்டி படிக்க தெரியும். மேற்படி வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டு ஆவணங்கள் எனக்கு சார்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சித்ரா எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2018 ம் ஆண்டுதான் தாக்கல் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை ஆங்கிலத்தில் இருப்பதால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை என்பதால் அதில் சொல்லப்பட்டுள்ள கட்சியை ஆட்சேபித்து என்னால் எதிர்வாதம் செய்யமுடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்காமல்தான் தாக்கல் செய்தேன். எனது மனைவியும் 6 ம் வகுப்புதான் படித்துள்ளார். 1806.2018 ம் தேதி 2 ம் பிரதிவாதி மோகன் என்பவருக்கு நான் போக்கிய அடமானம் பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் போக்கிய அடமானமாக எழுதி கொடுக்கவில்லை. நான் அவரிடம் வாங்கிய பணத்திற்காக எழுதி கொடுத்தேன். மேற்படி போக்கிய அடமான பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் நான் பணத்தை திரும்ப கொடுத்துவிட்டதால் அசல் என்னிடம்தான் உள்ளது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 18.06.2018 ம் தேதியிட்ட போக்கிய அடமான பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**18.6.2018 ம் தேதியிட்ட போக்கிய அடமான பத்திரத்தின் நகல் பிசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). மேற்படி போக்கிய அடமான பத்திரத்தில் சர்வே எண் 70/1 ஏ-ல் கண்ட 250 குழி விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி ஆவணத்தில் நிலத்திற்கு குத்தகை இல்லை பணத்திற்கு வட்டி இல்லை கெடு 2 வருடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் வட்டிக்காக போலிசுக்கு சென்றுவிடக்கூடாது என்பதற்காக அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. நான் 2 ம் பிரதிவாதியிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் தாவாச் சொத்தினை அவருக்கு போக்கிய அடமானமாகதாக் கொடுத்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி போக்கிய அடமான பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும்., அதனை பார்த்தால் எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

வழக்குரையில் நான் கிரயம் வாங்கிய ஆவண எண்.1772/2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்திலும் ஆவண எண்.1772/2012 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் 2 ம் பிரதிவாதிக்கு சொந்தமான நஞ்சை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் யார் யார் பிரச்சனை செய்தார்கள் என்றும் யார் யார் எனக்கு உதவி செய்தார்கள் என்றும் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ டைமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டு பின்னர் அழிக்கப்பட்டுள்ள சுப்ரமணியன் மற்றும் முருகானந்தம் யார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து தொடர்ந்து என்னுடைய அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருவதை காட்டுவதற்கு வட்டாட்சியரிடம் இருந்து அடங்கல் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குறுவை, தாளடி, சம்பா பருவ காலங்கள் எந்தெந்த மாதத்தில் வரும் என்றால் தெரியும். சம்பா மற்றும் தாளடி பருவம் புரட்டாசி மாதத்தில் ஆரம்பித்து தை மாதம் வரை வரும். குறுவை பருவம் ஆடி மாதத்தில் ஆரம்பித்து ஐப்பசி மாதம் வரை வரும். எனக்கு பருவ முறை தெரியாமலேயே பிரதிவாதிகள்

பிரச்சனை செய்வதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் என்ன பருவ கால சாகுபடி செய்தேன் என்றால் தாளடி பருவ சாகுபடி செய்தேன். நான் தாளடி பருவ சாகுபடி செய்தது குறித்து கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று பயிர் காப்பீடு செலுத்தியுள்ளேனா என்றால் தாளடி என்று கொடுக்க மாட்டார்கள் சம்பா பருவ சாகுபடி செய்ததற்கு பயிர் காப்பீடு செலுத்தியுள்ளேன். அவ்வாறான பயிர் காப்பீடு செலுத்தியதற்கான ரசீது செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் 2019ம் ஆண்டு காலத்தில் என்ன பயிர் சாகுபடி செய்தேன் என்றால் சிஆர்ஜ நெல் சாகுபடி செய்திருந்தேன். தாவா சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும்.

எனக்கு எதிராக 1ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த வழக்கின் சொத்து விவரத்தில் கண்ட சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுவிட்டதால் அவர்கள் மீது விரோதம் கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கிராம தலைவர்கள் எனக்கு ஆதரவாக உள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 15 நாட்களில் சாட்சி பட்டியல் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்ட பிறகு நான் சாட்சி பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அடங்கலில் புல எண் 70/1ஏ கோவிந்தம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதிக்கு நஞ்சை நில போக்கிய அடமான பத்திரம் எழுதி கொடுத்ததின் அடிப்படையில் தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரில் விஸ்வநாதன் எனக்கு ஆதரவாக இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் அவர்களுக்கு தண்டத்தொகை

கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் இவ்வழக்கிற்கான வழக்கு மூலம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

ஒப்பம்/-நா. சிவபழனி,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.